# செய்தி மடல்

NEWS LETTER – SOND - November & December 2019

**SOND** Social Organizations Networking for Development

### SOND நிறுவனத்தைப் பற்றி:-

SOND நிறுவனமானது புதிய சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் நிறைவேற்றுப் பணிப்பளர் திரு.ச.செந்துராசா அவர்களால் 1998 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் வட கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் கிளைகளைக் கொண்டு சமூக மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு செயற்பாட்டிலும், சமூக அபிவிருத்தி செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். எமது நிறுவனம் ஆரம்பிக்கபபட்டு 21 வருடங்களை கடந்து பணிகளைத் தொடருவதற்காக 22 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கவுள்ளோம்.


### Contact Information:

Director :- Mr.S.Senthurajah
T.P no :- 021 222 6700,
077 3314262
E-mail :- senthu@eureka.lk
Address :- SOND
18/10 Wymen road,
Nallur,
Jaffna.
&
R.K.M.Road,
Akkaraipattu.


## மனித விற்பனை (Human trafficking) நிலை பற்றி கலந்துரையாடல்

IOM விசேட நிபுணத்துவ ஆலோசகர் திரு.ஜொனதன் மாற்றன்ஸ் யாழ் மாவட்டத்தின் சில அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை சந்தித்து மனித விற்பனை (Human trafficking) நிலை பற்றி கலந்துரையாடினார்.

**SOND** நிறுவன பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் இதில் கலந்து கொண்டு மாவட்ட நிலைபற்றி எடுத்துரைத்தார்.



## அம்பாறை மாவட்ட மத நல்லிணக்க குழுவின் எதிர்காலத் திட்டமிடல் பயிற்சி

அம்பாறை மாவட்ட மத நல்லிணக்க குழுவின் எதிர்காலத் திட்டமிடல் பயிற்சியில் **SOND** நிறுவனப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா உரையாற்றுகின்றார்.



## யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் யாழ் மாவட்டத்தின் மனித விற்பனை தொடர்பான நிலை பற்றிய கலந்துரையாடல்

பெண்கள் மற்றும் ஊடக கட்டமைப்பு பிரதிநிதிகளும் SOND அமைப்பின் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் இணைந்து மாவட்டத்தின் மனித விற்பனை தொடர்பான நிலை பற்றிய கலந்துரையாடலை யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் நடாத்தினார்கள்.



## கரவெட்டி பிரதேச செயலகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி

அண்மையில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான தலைமைத்துவ பயிற்சியை சொண்ட் நிறுவனப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்கள் நடாத்துவதையும், கலந்து கொண்ட உத்தியோகத்தர்களும்.



## வலிவடக்குப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நல்லாட்சி, சட்டவாட்சி தொடர்பான பயற்சி

தேசிய சமாதானப் பேரவையின் SCORE திட்டத்தின் கீழ் SOND நிறுவனத்தின் ஏற்பாட்டில் வலிவடக்குப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நல்லாட்சி, சட்டவாட்சி தொடர்பான பயற்சி அண்மையில் நடைபெற்றது. இப் பயிற்சியில் வளவாளராக சட்டத்தரணி திருமதி.ச.கார்த்திகா தேவி கலந்துகொண்டார்.



## ஐக்கிய நாடுகள் தொண்டர் அமைப்புடனான (UNV) கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகள் தொண்டர் அமைப்பு (UNV) கலந்துரையாடல்

மேற்படி அமைப்பு பிரதிநிதிகள் எமது பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களை எமது அலுவலகத்தில் 26.11.2019 அன்று சந்தித்து எதிர்காலத் திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இளம் தொண்டர்களை அணிதிரட்டி சமூக சேவையில் ஈடுபடுத்தும் நடவடிக்கையில் எமது நிறுவனம் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.



## ரெரணா நிறுவனத்தினரின் யாழ் வருகையும் சிறுவர்களுக்கான உதவிகளும்

ரெரணா நிறுவனத்தினர் யாழ் மாவட்டத்தின் பல பாடசாலை சிறுவருக்கான கற்றல், விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்கள்.

இது தொடர்பான நிகழ்வு மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திரு.நா.வேதநாயகன் அவர்கள் தலைமையில் 27.11.2019 நடைபெற்றது. பின்னர் இவர்கள் SOND நிறுவனப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினர்.



## சண்டிலிப்பாய் பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான SCOUT பயிற்சி

இலங்கையில் மனித வியாபாரத்திற்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்தல் செயற்திட்டத்தினூடாக சண்டிலிப்பாய் பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி நெறியானது சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வளவாளர்களாக சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் திருமதி.S.டினேசியா அவர்களும் கலந்துகொண்டனர்



## சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சி

SOND நிறுவன ஏற்பாட்டில் தேசிய சமாதானப் பேரவையால் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சி பளைவீமன்காமம் தெற்கை சேர்ந்த சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிளுக்கும் பொது மக்களுக்கும் அண்மையில் நடாத்தப்பட்டது.



## வன்முறையற்ற தொடர்பாடல் பயிற்சி

SOND நிறுவன ஏற்பாட்டில் தேசிய சமாதானப் பேரவையின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் செயற் திட்டத்தின் கீழ் வன்முறையற்ற தொடர்பாடல் எனும் தலைப்பில் ஒரு நாள் பயிற்சி இளவாலை வடமேற்கைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிளுக்கும் பொது மக்களுக்கும் அண்மையில் நடாத்தப்பட்டது.



## நோர்வே மாநாட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த யுவதி

2025 இல் மிதிவெடியற்ற நாட்டை உருவாக்குவோம் எனும் தலைப்பில் நோர்வே நாட்டில் 7 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டில் இலங்கை சார்பாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வி.து.சிந்துஜா அவர்கள் கலந்து கொண்டார்.

இவர் மிதிவெடியில் காலினை இழந்தவர் எனும் ரீதியில் Sri lanka Campaign to Ban Landmines நிறுவனத்தினரால் இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டு ஒரு வருட காலமாக SOND நிறுவனத்தில் பயிற்சி பெற்று அண்மையில் நோர்வே நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டார்.

## இளவாலை வடமேற்கு கடற்கரையோர மரநடுகை

இளவாலை வடமேற்கு கடற்கரையோர கிராமங்களின் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக யாழ் வட்டார வன திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு 45 மரக்கன்றுகள் எமது நிறுவனத்தால் பெறப்பட்டு வழங்கப்பட்டன. சேந்தாங்குள கிராம மக்கள் இவ் மரங்களை நாட்டி அதற்கான பாதுகாப்பு வேலிகள் அமைத்திருப்பதையும் படங்களில் காணலாம்.



## Life planning training

SOND நிறுவனத்தில் life planning training நடைபெற்றது. இப் பயிற்சியானது SOND நிறுவனப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களால் நடாத்தப்பட்டது.

இப் பயிற்சியில் வெவ்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த பணியாளர்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கெண்டனர்.





## Palaiveemankamam south GS office Fencing

US AID நிதியுதவியுடன் தேசிய சமாதானப் பேரவையின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் SOND நிறுவனத்தினூடாக பளைவீமன்காமம் தெற்கு கிராம சேவையாளர் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் இளைஞர் சங்க கட்டத்திற்கான சுற்றுவேலி அமைக்கப்பட்டது.









## Year end Programme







**அன்பான பெற்றோரே!**

**உங்கள் பிள்ளைகளின்**
**ஆரம்ப பராயத்தில்**
**நீங்கள் வழங்கும் மிகப் பெரிய முதலீடு,**
**தரமான பராமரிப்பும் அன்பான பாதுகாப்பும் ஆகும்.**



SOND Better World Movement

unicef for every child